

திருச்சி காட்டூர் மாண்ட் போர்ட் பள்ளியில், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான விழாவில் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு அரசு பொது தேர்வுகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 2982 அரசு, அரசு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் தமிழ் பாடத்தில் 100 மதிப்பெண் பெற்ற 142 மாணவ, மாணவிகள் என மொத்தம் 3,124 நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும்விழா நடைபெற்றது. விழாவிற்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை தாங்கினார். நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். மேலும் 10, 12 ஆம் வகுப்பு அரசு பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மாணவ மாணவிகள் 3,124 நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள்.

### சொந்த ஊரான கேம்பர்ளி நகரில் சிலை நிறுவியதற்காக,

# கர்னல் ஜான் பென்னிகுயிக் குடும்பத்தினர் முதல்வருக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

இலண்டன், செப்.9-

முல்லைப் பெரியாறு அணையைத் தந்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களது சிலையை, அவரது சொந்த ஊரான கேம்பர்ளி நகரில் நிறுவியதற்காக, அவரது குடும்பத்தினரும் செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தைச் சார்ந்தவர்களும் நன்றி தெரிவித்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**முல்லைப் பெரியாறு அணையைத் தந்து நம் மக்களின் மனங்களில் நிறைந்து வாழும் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களது சிலையை, அவரது சொந்த ஊரான கேம்பர்ளி நகரில் நிறுவியதற்காக, அவரது குடும்பத்தினரும் செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தைச் சார்ந்தவர்களும் நன்றி தெரிவித்தனர்.**

**நேரில் அவர்கள் வைத்த கோரிக்கைகளையும் பரிசீலித்து நிறைவேற்றுவோம்.**

**வாழ்க ஜான் பென்னிகுயிக் அவர்களது புகழ்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சேலம் மாநகராட்சி

# அஸ்தம்பட்டி மண்டலத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!



சேலம், செப். 9-

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், வார்டு 13, 14 பகுதிகளுக்கு தொங்கும் பூங்கா திருமண மண்டபத்தில் நடை பெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், வார்டு 13, 14 பகுதிகளுக்கு தொங்கும் பூங்கா திருமண மண்டபத்தில் அன்று 06.09.2025 நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப் பட்டதைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. ”உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் திட்ட மிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 04.09.2025 வரை நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 84,695 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 95,923 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, இன்று (06.09.2025) சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம் வார்டு 13, 14 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு சேலம் பிரட்ஸ் ரோடு, தொங்கும் பூங்கா திருமண மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, சன்னியாசிகுண்டு பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு சன்னியாசி குண்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும், தாரமங்கலம் நகராட்சி வார்டு 5, 6, 7 க்குட்பட்ட பகுதிகளுக்கு தாரமங்கலம் ஜலகண்டாபுரம் பிரதான சாலை, 14வது வார்டு பொன்னுசாமி திருமண மண்டபத்திலும், வனவாசி பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6 க்குட்பட்ட பகுதிகளுக்கு வனவாசி சந்தைப்பேட்டை, 3வது வார்டு, பொடாரர.வை. முருகேச முதலியார் திருமண மண்டபத்திலும், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் பகுதிக்கு புதுப்பாளையம் திருக்குறள் திருமண மண்டபத்திலும், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம் நாழிக்கல்பட்டி, தம்மநாயக்கன்பட்டி பகுதிகளுக்கு நாழிக்கல்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் சந்தை திடலிலும், சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் மோரூர் கிழக்கு, அன்னதானப்பட்டி பகுதிகளுக்கு சங்ககிரி பார்வதிபாய் திருமண மண்டபத்திலும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் (06.09.2025) சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், வார்டு 13, 14 பகுதிக்கு தொங்கும் பூங்கா திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, முகாமில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இன்றைய தினம் முகாமில் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு 4 நபர்களுக்கு புதிய குடிநீர் இணைப்புக்கான ஆணையும், 2 நபர்களுக்கு சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான உத்தரவு ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தா தேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், உதவி ஆணையர் திருமதி லட்சுமி, சேலம் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி தலைவாசல் வடக்கு ஒன்றியம் சிறுவாச்சூர் ஊராட்சி அண்ணா நகரில் வசித்து வரும் தங்கம்மாள், சுமதி ஆகியோர் வீடுகள் திடீரென தீப்பற்றி எறிந்து முற்றிலும் சேதாரம் ஏற்பட்டது. இந்த தகவல் அறிந்ததும் கிழக்கு மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கு.சின்னதுரை, வடக்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி தேவையான அரிசி, பருப்பு, காய்கறிகள், துணிகள் மற்றும் உதவித்தொகையை வழங்கினர். மேலும் சின்னதுரை தமிழக அரசின் சார்பில் கிடைக்க வேண்டிய உதவித்தொகைக்கு வட்டாட்சியரிடம் போனில் தொடர்பு கொண்டு பேசினார். இந்நிகழ்வில் உதயசூரியன், ஆதிமூலம், நடேசன் ,சண்முகம், ஜெயபால் ,பெரியசாமி, அருண் பிரசாத் , கணேசன், சக்திவேல், சோலைமுத்து, குமார், தங்கமுத்து ,அன்பழகன் ,பாரதி கண்ணன் , ரஞ்சித், பெரியசாமி, மாயவன், முருகன், உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### கீழத்திருப்பாலக்குடி – கழக மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா.பழனிவேலு துணைவியார்

# ப.காயாம்பு அம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 9-

கீழத்திருப்பாலக்குடி - கழக மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா.பழனிவேலு அவர்களின் துணைவியார் மறைவுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:-

கீழத்திருப்பாலக்குடி தி.மு.க. மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா. பழனிவேலு அவர்கள் மனைவியும், நினைவில் வாழும் கலையரசன், நலமுடன் பூங்கொடி, சரவணன் ஆகியோரின் தாயாருமான, திருமதி ப.காயாம்பு அம்மாள் அவர்கள் நேற்று காலை இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து வருந்தினேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முத்துச்சாமியை தலைமைச் செயலகத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து தனது திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட நவல்பட்டில் வீட்டு வசதி வாரிய நிலத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் வேண்டி கோரிக்கை மனு அளித்தார்.

### கரூரில் கழக முப்பெரும் விழா!

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சாவூர், செப். 9 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் முப்பெரும் விழாவில் திரளாக கலந்துக் கொள்ளுதல், தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பெருக்க வெளிநாடுகள் சென்று முதலீடுகளை பெற்று திரும்பும் கழகத் தலைவருக்கு நன்றி மற்றும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 06.09.2025 காலை 10.00 மணியளவில் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க. நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட வேண்டி தீர்மானங்கள் குறித்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ விளக்கி சிறப்புரை யாற்றினார்.

இதில் தொகுதிப் பொறுப்பாளர்கள் கும்பகோணம் ரமேஷ் ராஜேந்திரன், திருவிடை மருதூர் குறிஞ்சிவாணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, எஸ்.துரை முருகன், ஜெயலெட்சுமி நடராஜன், ஜெ.நடராஜன், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கையில் நமது மாவட்டம் 40 சதவீத இலக்கை அடைந்துவிட்டோம். அதற்கு முழு ஒத்துழைப்பு நல்கிய மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களுக்கும், சார்பு அணியினருக்கும் நன்றியையும், பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பத்தை உடனடியாக மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்கவும் இக்கூட்டத்தின் வாயிலாக கோட்டுக் கொள்ளப்படுகிறது.

17.09.2025 அன்று கரூர், கோடாங்கிப்பட்டி பிரிவு சாலையில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெற உள்ளதையடுத்து நமது தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் மாநகர, ஒன்றிய, பேரூர் மற்றும் கிளை கழகங்களிருந்து கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகி கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம்.

தந்தை பெரியார் 147வது பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாள் விழா , முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி ஆகியோரின் பிறந்தநாள் விழாவை மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் ஊராட்சி பகுதிகளில் பெரியார், அண்ணா மற்றும் கோ.சி.மணி ஆகியோர் சிலை உள்ள பகுதிகளில் திருவுருவ சிலைக்கும், இல்லா பகுதிகளில் திருவுருவப்படங்களை வைத்தும் மாலை அணிவித்து மரியாதை செய்திட இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப் படுகிறது.

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நமது தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதிகளில் கிளை/வார்டு கழக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதே போன்று கூட்டம் நடத்தப்படாத கிளை/வார்டு பகுதிகளில் கூட்டம் நடத்த மாநகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இலண்டனில் ஆயிரம் ஆண்டுகளாக அறிவார்ந்த பலரின் கனவாக இருக்கும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் காவலனாக விளங்கிய சுயமரியாதைச் சுடரொளி, தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்தினை திறந்து வைத்து சுய மரியாதை இயக்கத்தையும் புரட்சியாளர் பெரியாரையும் போற்றிய நம் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், தமிழ்நாடு மாநில இளைஞர்களுக்கு வேலைவாய்புகளை அதிகரிக்கவும், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரூ.13,016 கோடிக்கான தொழில் முதலீடுகளை பெற்றுள்ளார். இதன்மூலம் 17,813 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் நலனே தன் உயிர் மூச்சாக கருதி அனுதினமும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கழகத் தலைவர், திராவிட ஆட்சியின் நாயகருக்கு தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் நன்றியையும், பாராட்டுகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்து கொள்கிறோம்.

**இரங்கல் தீர்மானம்:**

தலைமைக் கழகத்தின் சார்பில் 17.09.2025 அன்று கரூரில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் ‘பாவேந்தர் பாரதிதாசன்’ விருது பெற தேர்வு செய்யப்பட்ட “குளித்தலை சிவராமன்” தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் பெருந்தலைவர் அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கீழத்திருப்பாலக்குடி - கழக மூத்த முன்னோடி நினைவில் வாழும்

# சிங்கை சா.பழனிவேலு துணைவியார் ப.காயாம்பு அம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

மன்னார்குடி, செப். 9-

கீழத்திருப்பாலக்குடி தி.மு.க. மூத்த முன்னோடி நினைவில் வாழும் சிங்கை சா.பழனிவேலு அவர்கள் மனைவியும் நினைவில் வாழும் கலையரசன், நலமுடன் பூங்கொடி, சரவணன் ஆகியோரின் தாயாரும், நினைவில் வாழும் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் இரா.சண்முகம், இரா.சீனிவாசன் ஆகியோரின் சகோதரியும் செய்தித்துறை ஓய்வு பெற்ற கூடுதல் இயக்குநர் ச.பாண்டியனின் மாமியாருமாகிய மன்னார்குடி காவேரி லாட்ஜ் உரிமையாளரான திருமதி ப.காயாம்பு அம்மாள் அவர்கள் நேற்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு கீழத்தியருப்பாலக்குடி அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு கீழத்திருப்பாலக்குடி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், ஆனந்தவாடி ஊராட்சியில் நடைபெற்று வரும் சாலை பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விரைந்து பணியை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும் என அறிவுறுத்தினார். உடன் ஒன்றிய பொறுப்பாளர் பொன்.செல்வம், மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட கவிநாடு கிழக்கு சிவகாமி ஆச்சி நகர் பகுதியில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிய நியாய விலைக் கடை (ரேஷன் கடை) கட்டிடம் கட்டுவதற்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா அடிக்கல்நாட்டி பணிகளை துவங்கிவைத்தார். இந்நிகழ்வில் மாநகர மேயர் செ. திலகவதி செந்தில், துணை மேயர் எம். லியாகத் அலி, புதுக்கோட்டை தெற்கு மாநகரப் பொறுப்பாளர் வே.ராஜேஷ், பொதுக்குழு உறுப்பினர் என்.சாத்தையா, கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட தலைவர் வெற்றிச்செல்வன் உள்ளிட்ட மாவட்ட மாநகர கழக நிர்வாகிகள் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பினர் அப்பகுதி பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.